பெருந்துறை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

<u>ந.க.எண்: 78 / 2010</u> <u>நாள்: 3.05.2010.</u>

## <u>ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

ஈரோடு மாவட்டம், பெருந்துறை பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011–ன் மூலம் கீழ்க்கண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெருந்துறை பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **20.05.2009 ஆம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தபுள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 20.05.2010 –ந்தேதி பிற்பகல் 3.30 மணி அளவில் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பேரூராட்சியின் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 19.05.2010 ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 5.00 மணி வரை அதற்குரிய தொகையை இப்பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், செலுத்த வேண்டிய டேவணித்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டால் செலுத்த வேண்டிய காப்புத்தொகை, சால்வென்சி தொகை மற்றும் இதர விபரங்களை இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

### <u>வேலையின் விபரம்</u>

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஷெட்யூல் படிவம் கிரயத் தொகை | ஒப்பந்தப் புள்ளி டேவணித் தொகை | வேலை செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | கோவை மெயின் ரோட்டிலிருந்து மடத்துப்பாளையம் செல்லும் சாலையை விரிவுபடுத்தி தார்சாலை அமைத்தல் மற்றும் கல்வெர்ட் அமைத்தல். ரோடு அகலம் – 7.50 மீ. நீளம் – 400 மீட்டர் | 1000000/- | 6240- | 20000 | 90 நாட்கள் |
| 2 | பணிக்கம்பாளையத்தில் 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்தல். (1000 மீ) | 375000/- | 780- | 7500 | 60 நாட்கள் |
| 3 | பஜனைக் கோயில் வீதியில் 30,000 லிட்டர் (OHT) டேங்க் கட்டி 7.5 குதிரை வேக நீர்மூழ்கி மோட்டார் வைத்து குடிநீர்க் குழாய் விஸ்தரிப்புச் செய்தல் (1800 மீ) | 550000/- | 1560- | 11000 | 90 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | ஒலப்பாளையத்தில் 10,000 [O.H.T.] கட்டி 7.5 எச்.பி. குதிரைவேக நீர்மூழ்கி மோட்டார் வைத்து குடிநீர்க் குழாய் விஸ்தரிப்புச் செய்தல். (1000 மீட்டர்) | 425000/- | 780- | 8500 | 60 நாட்கள் |
| 5 | குயவன் குட்டையை தூர் வாரி சிறுவர் பூங்கா அமைத்தல். | 700000/- | 1560- | 14000 | 90 நாட்கள் |
| 6 | ஒலப்பாளையம் அரிசனக் காலனியில் கான்கிரீட் சாலை அமைத்தல் மற்றும் கோட்டைமேடு அரிசனக் காலனியில் குறுகிய சந்துகளுக்கு கான்கிரீட் சாலை அமைத்தல். | 800000/- | 1560- | 16000 | 90 நாட்கள் |
| 7 | தினசரி மார்க்கெட்டில் சென்னிமலை ரோட்டின் பக்கம் படிக்கட்டுடன் 7 கடைகள் கட்டுதல். | 1200000/- | 6240- | 24000 | 90 நாட்கள் |
| 8 | பெருந்துறை கோட்டை மேடு மயானத்தில் தார்சாலை, எரி மேடைகள், மின் விளக்குகள் அமைத்தும், சுற்றுச்சுவர் மற்றும் தண்ணீர் வசதி செய்தல். | 600000/- | 1560- | 12000 | 90 நாட்கள் |
| 9 | தோப்புப்பாளையத்தில் 30,000 லிட்டர் [OHT] டேங்க் கட்டி குடிநீர்க் குழாய் விஸ்தரிப்பு செய்தல் (1350 மீ) | 375000/- | 780- | 7500 | 60 நாட்கள் |
| 10 | கடப்பமடையில் 10,000 லிட்டர் [OHT] டேங்க் கட்டி குடிநீர்க் குழாய் விஸ்தரிப்புச் செய்தல் (300 மீ) | 175000/- | 312- | 3500 | 60 நாட்கள் |

## நிபந்தனைகள்

1) ஒப்பந்ததாரர்கள் பேரூராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருத்தல் வேண்டும்.

2) ஒவ்வொரு வேலைக்கும் அட்டவணையில் கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்ட டேவணித்தொகை செலுத்தி இரசீது இணைக்கப்படாத மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3) செலுத்தப்படும் டேவணித்தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித்தொகை ரொக்கமாகவோ அல்லது வங்கி வரைவு (டிமாண்ட் டிராப்ட்) மூலமாகவோ செலுத்தலாம்.

4) ஒப்பந்தபுள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலை, டெண்டர் தேதி மற்றும் நேரம் ஆகியவைகளை தெளிவாகக் குறிப்பிட்டு செயல் அலுவலர், பெருந்துறை பேரூராட்சி என முகவரியிட்டு கொடுக்கப்பட வேண்டும். உறையில் ஒப்பந்ததாரர்களின் முழு அஞ்சல் முகவரியும் எழுதப்பட வேண்டும்.

5) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்விதக் காரணம் கூறாமல் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

6) ஒப்பந்ததாரர்கள் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணம் இல்லாமல் விலக்கிக் கொண்டால் பின்னர் அவர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமின்றி நிராகரிக்க முடியும்.

7) வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.

8) ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூபாய் 20/– (இருபது) மதிப்புள்ள முத்திரைத்தாளில் உடன்படிக்கை எழுதித்தர வேண்டும்.

9) வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக நல்ல முறையில் முடித்து கொடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்கப்படவில்லையெனில் வேலையை ரத்து செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல்

அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எந்த இழப்புக்கும் ஒப்பந்ததாரர்களே முழுப்பொறுப்பாவார்கள்.

10) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்ததாரர்களின் டேவணித் தொகையும், மேலே கண்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்ததாரரின் வைப்புத் தொகைகளையும் எவ்வித முன்னறிவிப்பின்றி பறிமுதல் செய்யப்படும்.

11) குறிப்பிட்ட தேதியில் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்ததாரர் அவ்வேலைக்காக செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும் முந்தைய ஒப்பந்ததாரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12) சாலை வேலைகளைப் பொறுத்த வரையில் கிராவல் மற்றும் ஜல்லி சேகரத்திற்கு மட்டும் தொகை பட்டுவாடா செய்யப்பட மாட்டாது. வேலையை நல்ல முறையில் செய்து முழு அளவில் முடித்த பின்னர்தான் முழுத்தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.

13) கட்டுமானப் பொருள்களை (சிமெண்ட், கம்பி ) ஒப்பந்ததாரரே வாங்கி பயன்படுத்த வேண்டும். கட்டுமானப்பொருள்கள் **ISI** தரமானதாக இருத்தல் வேண்டும்.

14) கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருட்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால் ஏழு தினங்களுக்குள் அப்பொருட்கள் அப்புறப்படுத்திக் கொள்வதுடன் பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில் ஒப்பந்ததாரர் சேகரித்திடல் வேண்டும்.

15) யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பி வழங்கப்படும்.

16) வேலையை முடித்த பின்னர் பட்டியலில் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு மீதித்தொகை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| வ. எண் | விபரம் | பிடித்தம் செய்யும் அளவு |
|---|---|---|
| 1 | கூடுதல் வைப்புத்தொகை | 3% |
| 2 | வருமான வரித்தொகைப் பிடித்தம் | 2% |
| 3 | வருமானமேல்வரி | 10% |
| 4 | கல்வி வரி | 3% |
| 5 | விற்பனைவரி | 2% |
| 6 | விற்பனைவரி மேல்வரி | 5% |
| 7 | நிறுத்தி வைக்கப்படும் தொகை | 5% |
| 8 | தார்கிரயம் | அங்கீகரிக்கப்பட்ட வேலைப் பட்டியலின்படி |
| 9 | சிமெண்ட் கிரயம் | |
| 10 | ரோலர் வாடகை | |
| 11 | கலவை இயந்திர வாடகை | |
| 12 | தண்ணீர் கட்டணம் | |
| 13 | தொழில் நுட்ப உதவியாளர் ஊதியம் | |

17) வேலை உத்திரவு வழங்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் வேலைகளுக்கான மதிப்பீட்டுத் தொகையில் 0.3% தொகையை **The Manual Workers General Welfare Fund of TNCWW Board Chennai** என்ற முகவரியிட்ட வங்கி வரைவோலையாக பெற்று அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

18. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கையில் தடை ஏதுமில்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைக்கான ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட டேவணித்தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித்தரப்படும்.

19. வேலைகள் சம்பந்தமான அவ்வப்பொழுது செயல்அலுவலர், உதவி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர் ஆகியோர் தெரிவிக்கும் அறிவுரைகளுக்கு உட்பட்டு ஒப்பந்ததாரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

செயல் அலுவலர்,
பெருந்துறை பேரூராட்சி.

<u>பெறுநர்:</u>

பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்கள்,
பெருந்துறை பேரூராட்சி.

<u>நகல்:</u>

1. பேரூராட்சிகள்இயக்குநர், குறளகம், சென்னை–108, அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர், (பேரூராட்சிகள்) ஈரோடு அவர்களுக்கு, தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. உதவி பொறியாளர், பெருந்துறை பேரூராட்சி.
6. செயல் அலுவலர், காஞ்சிக்கோவில், சென்னிமலை, கருமாண்டிசெல்லிபாளையம், நல்லாம்பட்டி, பெத்தாம்பாளையம், குன்னத்தூர், ஊத்துக்குளி பேரூராட்சிகள்.
7. அலுவலக விளம்பரப் பலகை.